THE HINDU businessline.

# Tamil Nadu urges innovators to commercialise Intellectual Property

Our Bureau
Chennai

The Tamil Nadu government hopes to scale up and commercialise intellectual property available in the State, said the Deputy Chief Minister Udhayanidhi Stalin as he inaugurated the first annual Innovate in Tamil Nadu (IN2TN) IP Conclave in Chennai. Tamil Nadu was a pioneer in launching an IT policy for a State, he recalled.

"Tamil Nadu has plenty of investment opportunities, and we urge investors to partner with us early on in our innovation ecosystem," he said. Palanivel Thiaga Rajan, Minister for Information Technology & Digital Services (IT&DS), said Tamil Nadu makes up almost 17 per cent of total patents filed in India, and it has shown that a State can focus on both growth and social justice.



Deputy Chief Minister Udhayanidhi Stalin

The conclave themed "Intellectual Powerhouse: Transforming Tamil Nadu into the Innovation Capital of India" was organised by Tamil Nadu Technology (iTNT) Hub, under the Information Technology & Digital Services Department, Government of Tamil Nadu.

## IP FILING

Commodore Amit Rastogi (Retd), Chairman & Managing Director, National Research & Development Corporation, said Tamil Nadu was at the top in terms of number of patents filed in FY24 at 7,686. This was largely contributed by organisations such as IIT-Madras, Anna University, Zoho, and Ashok Leyland.

Josh Foulger, President - Electronics, ZETWERK, urged innovators to patent their work when they innovate or build processes. "We at Zetwerk have started a group currently, which may in future become a company, called ZEAL- Zetwerk Electronics Automation Lab, for in-house needs currently and plan to do it commercially also," he said.

The Deputy CM also handed over cheques for seed funds under iTNT Hub's Foundation Fund to five deep and emerging tech start-ups incubated under the PATHFINDER programme at iTNT Hub.

THE NEW INDIAN EXPRESS

# Intellectual Property meet opened by DyCM

CHENNAI: Deputy Chief Minister Udhayanidhi Stalin on Wednesday inaugurated Tamil Nadu's first Innovate in Tamil Nadu (IN$^2$TN) Intellectual Property Conclave. "This conclave will help researchers, startups, industries, and policymakers enhance intellectual property awareness. It will build a culture where IP is seen as both a creative and economic asset," Udhayanidhi said at the event. ENS

THE TIMES OF INDIA

# Udhayanidhi urges researchers to build products, startups

**Chennai:** Deputy chief minister Udhayanidhi Stalin urged researchers to create products and build startups, looking beyond publication. At the first annual Innovate in TN (IN2TN) conclave on commercialising academic research on Wednesday, he said govt is raising awareness on existing intellectual property in TN to enhance protective mechanisms and facilitate commercialisation of innovations. He said major IT companies are expanding into tier-II cities, and govt schemes such as 'Naan Mudhalvan' are bridging the gap among youth.

He launched iTNT Hub's foundation fund to back startups in AI, robotics, clean energy and space-tech, and disbursed seed funds to five deep-tech startups at the event. It signed agreements with six entities, including National Research Development Corporation (NRDC), Centre for Development of Advanced Computing (C-DAC) to support state's deep-tech startups.

State information technology minister Palanivel Thiaga Rajan said TN has almost 20% share in the country's patent filings. "We have to leverage research and innovation and take those ideas to commercial outcomes into companies.Our future is determined by how we can implement innovative ideas for job creation," he said. TNN

DT NEXT



Deputy CM Udhayanidhi Stalin with IT Minister Palanivel Thiaga Rajan at the conclave on Wednesday

# Conclave moves tech from varsities to industries: Dy CM

**CHENNAI: Deputy Chief Minister Udhayanidhi Stalin on Wednesday inaugurated the 'Innovate in TN–IP conclave' in the city, and said that the State government was addressing skill gaps and equipping students to be industry-ready through the Naan Mudhalvan scheme.**

Speaking at the conclave, Udhayanidhi said that with the efforts of the Dravidian Model government, TN has emerged as the third largest software exporter in the country.

"Chennai is called the SaaS (Software as a Service) capital of India," he added. "With the expansion of major IT firms to tier-II cities like Coimbatore and Madurai, the State is addressing skill gaps and equipping our students to be industry-ready via initiatives like Naan Mudhalvan scheme."

Referring to the 2,000 free Wi-Fi spots set up in Chennai, Tambaram, Avadi and Coimbatore Corporations, Udhayanidhi averred that TN had emerged as a leader in building a structured, state-wide model since launching the iTNT Hub in May 2023. "Partnerships built between the State government and leading industries, global hubs and premier academic institutions will build strong connections and a vibrant innovation ecosystem, leading to co-creation, funding and technology transfer," he stated. "The iTNT hub leads these efforts with support from national and global partners, helping to move technology from universities to industries and turn research into real value."

IT Minister Palanivel Thiaga Rajan, vice chairman of state planning commission Jeyaranjan, and other officials took part in the event.

தினகரன்

# தமிழ்நாட்டில் முதலீடு செய்ய வாருங்கள்

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அழைப்பு



சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடந்த தமிழ்நாட்டின் புத்தமை அறிவுசார் சொத்துரிமை முதலாவது மாநாட்டையொட்டி அமைக்கப்பட்ட தொழில்நுட்ப கண்காட்சியில், தமிழ்நாட்டை சேர்ந்த 16 ஆராய்ச்சியாளர்களின் காப்புரிமை பெற்ற ஆழ்நிலை கண்டுபிடிப்புகள் அடங்கிய அரங்குகளை துணை முதல்வர் உதயநிதி பார்வையிட்டு, ஆராய்ச்சியாளர்களுடன் கலந்துரையாடினார். அருகில், அமைச்சர் பழனிவேல் தியாகராஜன்.

**சென்னை, ஜூலை 31:** தமிழ்நாட்டில் முதலீடு செய்ய வாருங்கள் என்று முதலீட்டாளர்களுக்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அழைப்பு விடுத்தார்.

தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையில் சார்பில் சென்னை, கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் தமிழ்நாட்டின் புத்தமை அறிவுசார் சொத்துரிமை முதலாவது மாநாடு நேற்று நடைபெற்றது. இதையொட்டி அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியில், தமிழ்நாட்டை சேர்ந்த 16 ஆராய்ச்சியாளர்களின் காப்புரிமை பெற்ற கண்டுபிடிப்புகள் அடங்கிய அரங்குகளை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பார்வையிட்டு, ஆராய்ச்சியாளர்களுடன் கலந்துரையாடினார். நிகழ்ச்சியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது:

டிஜிட்டல் சகாப்தத்தில் தமிழகத்தின் பயணத்திற்கு அடித்தளமிட்டது கலைஞரின் தொலைநோக்கு தலைமை தான். அவர் தான் ஒரு துணிச்சலான மற்றும் முற்போக்கான நடவடிக்கையாக அர்ப்பணிப்புடன் கூடிய மாநில தகவல் தொழில்நுட்ப கொள்கையை அறிமுகப்படுத்திய இந்தியாவின் முதல் முதல்வர்.

பள்ளிகளில் கணினிகல்வியை கொண்டு வந்தார். டைடல் பூங்காக்களை அமைத்தார். இதன்மூலம் தமிழ்நாட்டில மில்லியன் கணக்கான இளைஞர்களின் வாழ்க்கையை மாற்றியமைத்து, அவர்களின் வாழ்க்கையை ஒளிரச் செய்துள்ளார். கலைஞரின் அடிச்சுவடுகளை பின்பற்றி, முதல்வர் மு.க.ஸ்டாலின் தமிழகத்தை தகவல் தொழில்நுட்பத்தில் முன்னணி மாநிலமாக மாற்றியுள்ளார். அது, தற்போது தமிழகத்தில் மாற்றத்திற்கான பாதையை உருவாக்கி வருகிறது.

தொழில் முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்குகிறது. தமிழ்நாட்டில் அதிகளவில் தொழில் முதலீடுகள் குவிந்து வருகிறது. மென்பொருள் ஏற்றுமதியில் இந்திய அளவில் 3வது மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. 'நான் முதல்வன்' திட்டம் மூலம் தமிழக மாணவர்கள் தகவல் தொழில்நுட்பத் துறையில் சாதித்து வருகின்றனர்.

இந்த மாநாடு மூலம் தமிழ்நாடு அரசுக்கும் முன்னணி தொழில்கள், உலகளாவிய மையங்கள் மற்றும் முதன்மையான கல்வி நிறுவனங்களுக்கும் இடையே பல புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின்றன. இந்த கூட்டாண்மைகள் வலுவான தொடர்புகளையும், துடிப்பான கண்டுபிடிப்பு சுற்றுச்சூழல் அமைப்பையும் உருவாக்க உதவும். இது கூட்டு உருவாக்கம், நிதி மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றத்திற்கு வழிவகுக்கும். தமிழ்நாட்டில் முதலீட்டிற்கான ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. எளிதாக வணிகம் செய்வதில் தமிழ்நாடு முதலிடத்தில் இருப்பதாக பல அறிக்கைகள் கூறியுள்ளது. தமிழ்நாட்டில் முதலீடு செய்ய உங்களை அழைக்கிறேன். நாம் ஒன்றாக முன்னேறுவோம்.

இவ்வாறு அவர் பேசினார்.

இதில் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், மாநில திட்டக்குழுவின் செயல் துணைத் தலைவர் ஜெ.ஜெயரஞ்சன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அரசு செயலாளர் பிரஜேந்திர நவ்னித் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

தினமலர்

# அறிவுசார் சொத்துரிமையை விரைந்து வணிகமாக்க வேண்டும்

## ஐ.என்.2டி.என்., முதல் மாநாட்டில் வலியுறுத்தல்

**சென்னை, ஜூலை 31–**

புதுமை கண்டுபிடிப்பாளர்கள், தங்கள் அறிவுசார் சொத்துரிமையை விரைந்து வணிகமயமாக்கிக் கொள்ள வேண்டுமென, ஐ.என்.2டி.என்., எனப்படும் இன்னோவேஷன் இன் தமிழ்நாடு அறிவுசார் சொத்துரிமை மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது.

சென்னை கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலகத்தில், தமிழகத்தில் முதல் முறையாக இந்த மாநாடு நடைபெற்றது. மாநாட்டை துணை முதல்வர் உதயநிதி துவக்கி வைத்தார். தகவல் தொழில்நுட்பம் மற்றும் மின்னணு சேவைகள் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் பங்கேற்றார்.

அறிவுசார் சொத்துரிமையில் தமிழகத்தை நாட்டின் தலைநகராக விளங்கச் செய்யும் நோக்கிலான இந்த மாநாட்டை, தகவல் தொழில்நுட்ப துறையின் கீழ் செயல்படும், தமிழக தொழில்நுட்ப மையம் ஏற்பாடு செய்திருந்தது.

அதில், தமிழ்நாடு முழுவதிலுமிருந்து 16 ஆராய்ச்சியாளர்கள் தங்கள் காப்புரிமை பெற்ற கண்டுபிடிப்புகளை காட்சிப்படுத்தினர்.

நிகழ்ச்சியில் பேசிய, தேசிய ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு அமைப்பின் தலைவர் அமித் ரஸ்தோகி, காப்புரிமை விண்ணப்பிப்பதில் தமிழகம் முதலிடம் வகிப்பதாகவும், 2023 – 24ம் நிதியாண்டில் 7,686 விண்ணப்பங்கள் வந்ததாகவும் தெரிவித்தார்.

புதுமை கண்டுபிடிப்பாளர்கள் உடனடியாக காப்புரிமை பெற்று விரைவாக வணிகரீதியாக பயன்படுத்த துவங்க வேண்டும் என, ஜெட்விர்க் நிறுவன எலக்ட்ரானிக் பிரிவு தலைவர் ஜோஷ் பவுல்கர் வலியுறுத்தினார்.

நிகழ்ச்சியில், தமிழக தொழில்நுட்ப மைய துவக்க நிதியில் இருந்து ஐந்து, ஆழமான மற்றும் வளரும் தொழில்நுட்ப ஸ்டார்ட்அப்களுக்கு பாத்பைண்டர் திட்டத்தின்கீழ் நிதியுதவிக்கானகாசோலை வழங்கப்பட்டது.

பல்வேறு பிரிவுகளில் நடந்த மாஸ்டர் வகுப்புகளில், 270 ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள் மற்றும் புத்தொழில் நிறுவனர்கள் கலந்து கொண்டனர்.

காப்புரிமை விண்ணப்பித்தல், புதுமை கண்டுபிடிப்பை பாதுகாத்தல், காப்புரிமை, வணிக முத்திரை, ஸ்டார்ட் அப்பில் டிசைனுடன் கூடிய புதுமை கண்டுபிடிப்பு, உரிமம் பெறுதல், வணிகரீதியாக்கல் ஆகிய பிரிவுகளில் மாஸ்டர் வகுப்புகள் நடைபெற்றன.

### ஏழு ஒப்பந்தங்கள்

- ஐடிஎன்டி ஹப் உடன் அமெரிக்கன் சொசைட்டி ஆஃப் மெக்கானிக்கல் இன்ஜினியர்ஸ் இந்தியா, தேசிய ஆராய்ச்சி மேம்பாட்டுக் கழகம், கணினி மேம்பாட்டு மையம், பெங்களூரு, போஷ் இந்தியா, மஹிந்திரா & மஹிந்திரா, மற்றும் இந்திய அறிவியல் தொழில்நுட்பம் & பொறியியல் உட்பட ஏழு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்
- தொழில்துறை, கல்வித்துறை இடையேயான ஒத்துழைப்பை வளர்க்கும் நோக்கத்தில் மாநாடு
- தமிழக பொறியியல் கல்லூரிகள், காப்பீட்டு மையங்கள், புத்தாக்க நிறுவனங்கள், முதலீட்டாளர்கள், தொழில்நுட்ப ஆராய்ச்சியாளர்கள், காப்புரிமையாளர்கள் என கிட்டத்தட்ட 1,500 பேர் பங்கேற்றனர்.

தினமலர்
தேசிய தமிழ் நாளிதழ்

# தகவல் தொழில்நுட்ப பயணம் மேம்படுத்தப்படும்

## துணை முதல்வர் உதயநிதி உறுதி



தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை சார்பில், சென்னை கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடந்த 'தமிழகத்தில் புதுமை ஐபி' மாநாட்டை துணைமுதல்வர் உதயநிதி தொடங்கிவைத்து, தொழில்நுட்ப கண்காட்சியை பார்வையிட்டார். அருகில், அமைச்சர் பழனிவேல் தியாகராஜன்.

**சென்னை, ஜூலை 31–**

தகவல் தொழில்நுட்பவியல் துறை சார்பில், சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் அறிவுசார் சொத்துரிமை முதலாவது மாநாட்டை தொடங்கி வைத்து துணை முதல்வர் உதயநிதி பேசியது:

கடந்த 4 ஆண்டுகளில் ஐடி மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையில் நமது அரசு எடுத்த தொடர் முயற்சிகளால் நாட்டின் மூன்றாவது பெரிய மென்பொருள் ஏற்றுமதியாளராக தமிழகம் உருவெடுத்துள்ளது. இந்தியாவின் மென்பொருள் சேவையின் தலைநகரம் என்று சென்னை அழைக்கப்படுகிறது. முக்கிய ஐடி நிறுவனங்கள் கோவை, மதுரை உள்ளிட்ட இரண்டாம் கட்ட நகரங்களில் வேகமாக விரிவடைந்து வருகின்றன. சென்னை, தாம்பரம், ஆவடி, கோவை மாநகராட்சி பகுதிகளில் 2 ஆயிரம் இடங்களில் இலவச வைபை கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த முயற்சிகளை விரைவுபடுத்த 2023ம் ஆண்டு மே மாதம் 'ஐடிஎன்டி' மையத்தை முதல்வர் தொடங்கினார்.

அன்று முதல் கட்டமைக்கப்பட்ட மாநில அளவிலான புதுமையான மாதிரியை உருவாக்குவதில் தமிழகம் முன்னணியில் உள்ளது. தமிழகத்தை புத்தாக்க தலைநகராகவும், அறிவுசார் சக்தி மையமாகவும் மாற்றுவதற்கான விருப்பங்களை இந்த மாநாடு பிரதிபலிக்கிறது. இந்த மாநாடு அறிவுசார் சொத்துக்களை உருவாக்குவதை மட்டுமல்லாமல், அதை பாதுகாத்து, அளவிடுவதையும் வணிகமயமாக்குவதையும் நோக்கமாக கொண்டுள்ளது.

ஆராய்ச்சியாளர்கள், தொடக்க நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் ஆகியோருக்கு அறிவுசார் சொத்து விழிப்புணர்வை மேம்படுத்த இந்த மாநாடு உதவும். இது அறிவுசார் சொத்துரிமையை படைப்பு மற்றும் பொருளாதார சொத்தாக கருதும் கலாச்சாரத்தை உருவாக்க உதவும்.

தமிழக அரசுக்கும் முன்னணி தொழில் நிறுவனங்கள், உலகளாவிய மையங்கள் மற்றும் முன்னணி கல்வி நிறுவனங்களுக்கும் இடையே பல புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி வருகின்றன. இந்த கூட்டாண்மைகள் வலுவான தொடர்புகளையும் துடிப்பான கண்டுபிடிப்பு சுற்றுச்சூழல் அமைப்பையும் உருவாக்க உதவும். இது கூட்டு உருவாக்கம், நிதி மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றத்துக்கு வழி வகுக்கும்.

தமிழகத்தின் தகவல் தொழிநுட்ப பயண வரலாற்றில் இந்த மாநாடு என்றும் நினைவு கூறப்படும். கொள்கை, உள்கட்டமைப்பு, முதலீடு மற்றும் தலைமை மூலம் இந்த பயணத்தை மேம்படுத்த தமிழக அரசு உறுதி பூண்டுள்ளது.

இவ்வாறு துணை முதல்வர் பேசினார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

# 'தகவல் தொழில்நுட்பத்தில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக திகழ்கிறது'

## அறிவுசார் சொத்துரிமை மாநாட்டில் துணை முதல்-அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு

சென்னை, ஜூலை 31-

'தகவல் தொழில்நுட்பத்தில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக திகழ்கிறது' என அறிவுசார் சொத்துரிமை மாநாட்டில் துணை முதல்-அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கூறினார்.

### மாநாடு

சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் தமிழக தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் சார்பில் அறிவுசார் சொத்துரிமை முதலாவது மாநாடு நடந்தது.

மாநாட்டுக்கு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் தலைமை தாங்கினார்.

முதன்மை செயலாளர் பிரஜேந்திர நவ்நீத் வரவேற்றார். துணை முதல்-அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு மாநாட்டை தொடங்கி வைத்தார்.

பின்னர் அவர் பேசியதாவது:-

தமிழகத்தில் கருணாநிதி தலைமையிலான ஆட்சியின் போது தான் தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள் உருவாக்கப்பட்டன. இன்று அது அபார வளர்ச்சி அடைந்துள்ளன. இதன்மூலம் லட்சக்கணக்கான தமிழக இளைஞர்களின் வாழ்க்கையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

### புதிய ஆராய்ச்சி

மென்பொருள் ஏற்றுமதியில் இந்திய அளவில் தமிழகம் 3-வது இடத்தில் இருக்கிறது. புதிய தொழில்நுட்பங்களை தி.மு.க. அரசு எப்போதும் வரவேற்கிறது. தகவல் தொழில்நுட்பத்தில் முன்னணி மாநிலமாக தமிழகம் விளங்குகிறது.

மதுரை, கோவை போன்ற நகரங்களில் முக்கிய ஐ.டி. நிறுவனங்கள் கால் பதித்துள்ளன. இதனால் 2-ம் கட்ட நகரங்களில் ஐ.டி. தொழில் வேகமாக விரிவடைந்து வருகின்றன.

தமிழகத்தை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் புதிய ஆராய்ச்சிகளை கண்டுபிடித்து அதை வெளிப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் அதன்மூலம் புதிய தயாரிப்புகளையும், புத்தொழில் நிறுவனங்களையும் உருவாக்குவது பற்றி சிந்திக்க வேண்டும்.

தமிழகத்தில் முதலீடு செய்வதற்கு முதலீட்டாளர்களுக்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. தொழில் முதலீடு செய்வதை எளிதாக்கும் மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடத்தில் இருப்பதாக பல அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

'நான் முதல்வன்' திட்டம் மூலம் தமிழக மாணவர்கள் தகவல் தொழில்நுட்பத் துறையில் சாதித்து வருகின்றனர்.

இவ்வாறு அவர் பேசினார்.



கண்காட்சி அரங்கில் ஆராய்ச்சியாளர்களுடன் துணை முதல்-அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துரையாடியபோது எடுத்தபடம்.

### கண்காட்சி

மாநாட்டில் புத்தொழில் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு ரூ.53 லட்சம் நிதி வழங்கப்பட்டது. கல்வி ஆராய்ச்சியாளர்களின் காப்புரிமை பெற்ற கண்டுபிடிப்புகளை தொழில்நிறுவனங்கள் பயன்படுத்தி கொள்வதற்கான ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டன.

தொழில்நுட்ப புத்தொழில் நிறுவனங்களுக்கு உதவிகளை வழங்குவதற்காக 6 முன்னணி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

மாநாட்டு அரங்கில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டு ஆராய்ச்சியாளர்களுடன் உதயநிதி ஸ்டாலின் கலந்துரையாடினார்.

மாநாட்டில் மாநில திட்டக்குழு துணை தலைவர் ஜெயரஞ்சன், தேசிய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு கழகத்தின் தலைவர் அமித்ரஸ்தோகி, சென்னை ஐ.ஐ.டி. ஆராய்ச்சி குழு தலைமை செயல் அதிகாரி நடராஜன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாட்டில் அதிக அளவு முதலீடு செய்யுங்கள்

## முதலீட்டாளர்களுக்கு துணை முதல்வர் உதயநிதி வேண்டுகோள்

**சென்னை, ஜூலை 30:** தமிழ்நாட்டில் அதிக அளவு முதலீடுகளைச் செய்ய முன்வர வேண்டுமென துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கேட்டுக் கொண்டார்.

சென்னையில் புதன்கிழமை நடைபெற்ற அறிவுசார் சொத்துரிமைக்கான முதல் மாநாட்டில் அவர் பேசியதாவது:

நாட்டில் உதயமாகும் புதிய தொழில்நுட்பங்களைப் பயன்பாட்டில் கொண்டுவரவும், அதை ஊக்குவிக்கவும் திராவிட இயக்கம் எப்போதும் தயங்கியதில்லை. புதிய புதிய தொழில்நுட்பங்கள் சாதாரண மக்களுக்கும் கிடைக்கும் வேண்டும் என்பதில் திமுக

உறுதியாக இருக்கிறது. ஆட்சியில் இருக்கும் போதெல்லாம் இதற்கான பணிகளைத் தொடர்ந்து செய்துகொண்டே இருக்கிறது.

எண்ம தொழில்நுட்பத்துக்கான சகாப்தத்தின் பயணத்துக்கு முன்னாள் முதல்வர் கருணாநிதியின் ஆட்சிக் காலத்தில் அடித்தளமிடப்பட்டது. மாநிலத்துக்கென பிரத்யேக தகவல் தொழில்நுட்பக் கொள்கை அவரது ஆட்சியில்தான் அறிமுகப்படுத்தப்பட்டது. கணினி அறிவியல் கல்வி, பள்ளிகளில் பாடத் திட்டமாக கொண்டு வரப்பட்டதுடன், கணினி தொழில்நுட்பம் சார்ந்த அலுவலகங்கள் இயங்குவதற்கு வசதியாக டைடல் பூங்காக்களை உருவாக்கினார். தற்போது அந்தப் பூங்காக்கள் மூலம் லட்சக்கணக்கான இளைஞர்களின் வாழ்வு வசந்தமாகிக் கொண்டிருக்கிறது.

கருணாநிதியைப் பின்பற்றி ஆட்சி செய்துவரும் தற்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலினும் தகவல் தொழில்நுட்பத்தில் தமிழ்நாட்டை முன்னணி மாநிலமாக உருவாக்கி இருக்கிறார். இத்துறையில் ஏராளமான சாதனைகளைச் செய்து காட்டியுள்ளோம். தகவல் தொழில்நுட்பம் சார்ந்த நிறுவனங்கள் சென்னை நகரத்தில் மட்டுமன்றி, கோவை, மதுரை போன்ற இரண்டாம் நிலை நகரங்களிலும் தொடங்கப்பட்டுள்ளன.

தகவல் தொழில்நுட்பப் பணிக்கு ஏற்ற வகையில், இளைஞர்களின் திறன்களை மேம்படுத்த 'நான் முதல்வன்' போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**முதலீடு செய்ய வாருங்கள்:** அறிவுசார் சொத்துரிமைக்கான முதல் மாநாட்டை நடத்துகிறோம். எனவே, நம்முடைய மாணவர்கள் தங்களுக்குத் தோன்றுகின்ற புதிய சிந்தனைகளை அடைகாத்து அவற்றைச் செயல்பாட்டுக்கு கொண்டு வரவேண்டும். மேலும், ஆராய்ச்சிப் பிரிவில் ஈடுபட்டுள்ளவர்களும் தங்களது அரிய கண்டுபிடிப்புகளைப் பதிப்பிப்பது மட்டுமன்றி, அவற்றைச் செயல்வடிவத்துக்கு கொண்டு வர வேண்டும். புத்தொழில் நிறுவனங்களாக உருவாக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் முதலீடு செய்வதற்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. இவற்றை முதலீட்டாளர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

வணிகத்தை எளிதாக்கும் நடைமுறைகளால் முதலீட்டில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக இருப்பதை பல்வேறு ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

ஒவ்வொரு துறைக்குமான பிரத்யேக கொள்கைகள், உள்கட்டமைப்பு வசதிகள், முதலீடுகள், தலைமைத்துவம் போன்ற பண்புகளால் தொழில் துறையில் தமிழ்நாடு அதிகாரம் பெற்றிடும் என்பதில் உறுதிபூண்டுள்ளது என்றார்.

நிகழ்வில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், மாநில திட்டக் குழு துணைத் தலைவர் ஜெயரஞ்சன், தேசிய ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் அமித் ரஸ்தோகி, தகவல் தொழில்நுட்பவியல் துறை முதன்மைச் செயலர் பிரஜேந்திர நவ்நீத், எல்காட் மேலாண்மை இயக்குநர் கார்த்திகேயன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற அறிவுசார் சொத்துரிமை முதலாவது மாநாட்டில் புதிய தொழில்நுட்பக் கண்காட்சியைப் பார்வையிட்ட துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின். உடன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் துறை சேவைகள் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் உள்ளிட்டோர்.

### கல்வி ஆராய்ச்சியாளர்களின் கண்டுபிடிப்புகளை பயன்படுத்திக் கொள்ள ஒப்பந்தம்

கல்வி ஆராய்ச்சியாளர்களின் கண்டுபிடிப்புகளை பயன்படுத்திக் கொள்வதற்கான ஒப்பந்தம், துணை முதல்வர் உதயநிதி முன்னிலையில் பரிமாறிக்கொள்ளப்பட்டது.

தமிழ்நாட்டைச் சேர்ந்த 16 ஆராய்ச்சியாளர்களின் காப்புரிமை பெற்ற கண்டுபிடிப்புகள் அடங்கிய அரங்குகளை அவர் பார்வையிட்டார். மேலும், கல்வி ஆராய்ச்சியாளர்கள் தாங்கள் கண்டுபிடித்த காப்புரிமை பெற்ற கண்டுபிடிப்புகளை தொழில் நிறுவனங்கள் பயன்படுத்திக் கொள்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் துணை முதல்வர் முன்னிலையில் செய்து கொள்ளப்பட்டன.

அத்துடன், அமெரிக்கன் சொசைட்டி ஆஃப் மெக்கானிக்கல் இன்ஜினியர்ஸ் இந்தியா, தேசிய ஆராய்ச்சி மேம்பாட்டுக் கழகம், மத்திய உயர்கணினி மேம்பாட்டு மையம், போஷ் இந்தியா, மகேந்திரா அண்டு மகேந்திரா உள்ளிட்ட நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. இதன்மூலம், அந்த நிறுவனங்களின் தொழில்நுட்ப வசதிகளை புத்தொழில் நிறுவனங்கள் பயன்படுத்திக் கொள்ள வழி ஏற்படும்.

மக்கள் குரல்
நடுநிலை நாளேடு




# தகவல் தொழில்நுட்பத்தில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக திகழ்கிறது

## அறிவுசார் சொத்துரிமை மாநாட்டில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு

சென்னை, ஜூலை.31

'தகவல் தொழில்நுட்பத்தில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக திகழ்கிறது' என அறிவுசார் சொத்துரிமை மாநாட்டில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கூறினார்.

சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் தமிழக தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் சார்பில் அறிவுசார் சொத்துரிமை முதலாவது மாநாடு நடந்தது.

மாநாட்டுக்கு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் தலைமை தாங்கினார்.

முதன்மை செயலாளர் பிரஜேந்திர நவ்நித் வரவேற்றார். துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு மாநாட்டை தொடங்கி வைத்தார்.

பின்னர் அவர் பேசியதாவது:

தமிழகத்தில் கருணாநிதி தலைமையிலான ஆட்சியின்போது தான் தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள் உருவாக்கப்பட்டன. இன்று அது அபார வளர்ச்சி அடைந்துள்ளன. இதன்மூலம் லட்சக்கணக்கான தமிழக இளைஞர்களின் வாழ்க்கையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. மென்பொருள் ஏற்றுமதியில் இந்திய அளவில் தமிழகம் 3வது இடத்தில் இருக்கிறது. புதிய தொழில்நுட்பங்களை தி.மு.க. அரசு எப்போதும் வரவேற்கிறது. தகவல் தொழில்நுட்பத்தில் முன்னணி மாநிலமாக தமிழகம் விளங்குகிறது.

மதுரை, கோவை போன்ற நகரங்களில் முக்கிய ஐ.டி. நிறுவனங்கள் கால் பதித்துள்ளன. இதனால் 2ம் கட்ட நகரங்களில் ஐ.டி. தொழில் வேகமாக விரிவடைந்து வருகின்றன.

தமிழகத்தை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் புதிய ஆராய்ச்சிகளை கண்டுபிடித்து அதை வெளிப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் அதன்மூலம் புதிய தயாரிப்புகளையும், புத்தொழில் நிறுவனங்களையும் உருவாக்குவது பற்றி சிந்திக்க வேண்டும்.

தமிழகத்தில் முதலீடு செய்வதற்கு முதலீட்டாளர்களுக்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. தொழில் முதலீடு செய்வதை எளிதாக்கும் மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடத்தில் இருப்பதாக பல அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

'நான் முதல்வன்' திட்டம் மூலம் தமிழக மாணவர்கள் தகவல் தொழில்நுட்பத்துறையில் சாதித்து வருகின்றனர்.

இவ்வாறு அவர் பேசினார்.

மாநாட்டில் புத்தொழில் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு ரூ.53 லட்சம் நிதி வழங்கப்பட்டது. கல்வி ஆராய்ச்சியாளர்களின் காப்புரிமை பெற்ற கண்டுபிடிப்புகளை தொழில் நிறுவனங்கள் பயன்படுத்தி கொள்வதற்கான ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டன.

தொழில்நுட்ப புத்தொழில் நிறுவனங்களுக்கு உதவிகளை வழங்குவதற்காக 6 முன்னணி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

மாநாட்டு அரங்கில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டு ஆராய்ச்சியாளர்களுடன் உதயநிதி ஸ்டாலின் கலந்துரையாடினார்.

மாநாட்டில் மாநில திட்டக்குழு துணை தலைவர் ஜெயரஞ்சன், தேசிய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு கழகத்தின் தலைவர் அமித்ரஸ்தோகி, சென்னை ஐ.ஐ.டி. ஆராய்ச்சி குழு தலைமை செயல் அதிகாரி நடராஜன், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்து தமிழ் திசை
தமிழால் இணைவோம்

### மகேந்திரா, போஷ் உட்பட 6 முன்னணி நிறுவனங்களுடன் ஒப்பந்தம்

# மென்பொருள் ஏற்றுமதியில் தமிழகம் 3-வது இடம்

## அறிவுசார் சொத்துரிமை மாநாட்டை தொடங்கி வைத்து உதயநிதி பெருமிதம்

**சென்னை**

சென்னையில் நடந்த முதலாவது அறிவுசார் சொத்துரிமை மாநாட்டை தொடங்கி வைத்த துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், இந்தியாவில் 3-வது பெரிய மென்பொருள் ஏற்றுமதியாளராக தமிழகம் திகழ்வதாக தெரிவித்தார். இந்த மாநாட்டில் 6 முன்னணி நிறுவனங்களுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

தமிழக அரசின் தகவல் தொழில்நுட்பத் துறையின்கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு தொழில்நுட்ப மையம் (ஐடிஎன்டி) சார்பில் முதலாவது அறிவுசார் சொத்துரிமை மாநாடு சென்னை கோட்டூர்புரத்தில் நேற்று நடைபெற்றது. 'அறிவுசார் மையம் மூலம் தமிழகத்தை இந்தியாவின் புதுமையின் தலைநகரமாக மாற்றுதல்' என்ற தலைப்பில் நடந்த மாநாட்டை துணை முதல்வர் உதயநிதி தொடங்கி வைத்து தொழில்நுட்ப கண்காட்சியை பார்வையிட்டார். தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் முன்னிலை வகித்தார்.

இந்த மாநாட்டில் டீப்-டெக் தொழில்நுட்பம், ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் தேசிய ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனம், மகேந்திரா, போஷ் உள்ளிட்ட 6 முன்னணி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. அதைத்தொடர்ந்து தமிழ்நாடு தொழில்நுட்ப பரிமாற்ற வசதி மையம் மூலம் ஆராய்ச்சியாளர்களுக்கு உதவும் வகையில் 4 முன்னணி சட்ட நிறுவனங்களிடம் சட்டப்பூர்வ பங்குதாரர்களின் விருப்பக் கடிதங்களும் பரிமாற்றம் செய்யப்பட்டன.

இதையடுத்து செயற்கை நுண்ணறிவு (ஏஐ), ரோபோட்டிக்ஸ், தொழில்நுட்ப மருத்துவம், விண்வெளி தொழில்நுட்பம், சைபர் பாதுகாப்பு, குவாண்டம் தொழில்நுட்பம் போன்ற வளர்ந்து வரும் தொழில்நுட்பத்தில் உள்வளர்ச்சி பெற்ற 5 ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு ஐடிஎன்டி மையத்தின் ஃபவுண்டேஷன் நிதியின் கீழ் காசோலைகளை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.

பின்னர் அவர் பேசியதாவது:

திராவிட இயக்கம் எப்போதும் புதிய தொழில்நுட்பங்களை ஊக்குவிக்கும். அந்தவகையில் ஒவ்வொரு முறை திமுக ஆட்சிக்கு வரும்போதும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் சமூகத்தின் ஒவ்வொரு பிரிவையும் சென்றடைவது உறுதிசெய்யப்படும்.

அந்தவகையில் முதல்வர் ஸ்டாலின் தலைமையில் ஐடி துறையில் தமிழகம் பல்வேறு புதிய சாதனைகளை எட்டியிருக்கிறது. கடந்த 4 ஆண்டுகளில் தமிழகம், இந்தியாவில் 3-வது பெரிய மென்பொருள் ஏற்றுமதியாளராக மாறியிருக்கிறது.

சென்னை மென்பொருள் சேவையின் தலைநகரமாக அழைக்கப்பட்டு வருகிறது. அதேபோல் முன்னணி ஐடி நிறுவனங்கள் கோவை, மதுரை போன்ற இரண்டாம் கட்ட நகரங்களுக்கும் தங்களை விரிவுபடுத்தி வருகின்றன. ஐடி துறையுடன் இணைந்து நான் முதல்வர் திட்டம் மூலம் மாணவர்களுக்கு திறன் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. டிஜிட்டல் அணுகலை வலுப்படுத்த சென்னை, தாம்பரம், ஆவடி மற்றும் கோவை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 2 ஆயிரம் இடங்களில் வைஃபை கருவிகள் நிறுவப்பட்டுள்ளன. இவ்வாறு பேசினார்.

இந்நிகழ்வில் தகவல் தொழில்நுட்பத் துறை செயலர் பிரஜேந்திர நவ்னித், எல்காட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் கார்த்திகேயன், ஐடிஎன்டி மையத்தின் தலைமை நிர்வாக அதிகாரி வனிதா வேணுகோபால், சென்னை ஐஐடி ஆராய்ச்சி பூங்காவின் தலைமை நிர்வாக அதிகாரி நாட் மலுப்பிள்ளை, மாநில திட்டக்குழுவின் துணைத் தலைவர் ஜெயரஞ்சன், தேசிய ஆராய்ச்சி மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் அமித் ரஸ்தோகி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.




சென்னையில் நேற்று நடைபெற்ற முதலாவது அறிவுசார் சொத்துரிமை மாநாட்டில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில் 6 முன்னணி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், செயலர் பிரஜேந்திர நவ்னித், எல்காட் நிறுவன மேலாண்மை இயக்குநர் கார்த்திகேயன், ஐடிஎன்டி தலைமை நிர்வாக அதிகாரி வனிதா வேணுகோபால் உள்ளிட்டோர் பங்கேற்றனர். படம்: ம.பிரபு

ఈనాడు

## పారిశ్రామిక పెట్టుబడుల ఆకర్షణలో తమిళనాడు అగ్రగామి

**ఆర్కేనగర్, న్యూస్‌టుడే:** పారిశ్రామిక పెట్టుబడులు ఆకర్షించడంలో తమిళనాడు అగ్రగామిగా ఉందని ఉపముఖ్యమంత్రి ఉదయనిధిస్టాలిన్ తెలిపారు. చెన్నై కోట్టూర్‌పురం అన్నా సెంటినరీ లైబ్రరీలో తమిళనాడు వినూత్న మేధో సంపత్తి హక్కులపై మొదటి మహానాడు బుధవారం జరిగింది. ఇందులో భాగంగా ఏర్పాటు చేసిన ప్రదర్శనలో తమిళనాడుకు చెందిన 16మంది పరిశోధకులు పేటెంట్ పొందిన ఆవిష్కరణలు ఉన్న స్టాళ్లను ఉపముఖ్యమంత్రి సందర్శించారు. ఆయన మాట్లాడుతూ.. ద్రావిడ మోడల్ పాలనలో ఐటీ రంగం మెరుగ్గా రాణిస్తోందన్నారు. కలైంజర్ పాలనలోనే ఐటీ పార్కులు ఏర్పడ్డాయన్నారు.



ఆవిష్కరణలు పరిశీలిస్తున్న ఉదయనిధి స్టాలిన్

## రూ.10.20 కోట్లతో కేపీ కాలువకు మరమ్మతులు

**ఉత్తుకోట, న్యూస్‌టుడే:** చెన్నై నగర ప్రజల దాహార్తిని తీర్చే పూండి చెరువుకు ఆంధ్రప్రదేశ్‌లోని నెల్లూరు సమీప కండలేరు జలాశయం నుంచి నీరు చేరుకుంటోంది. గత నవంబరు, డిసెంబరు నెలల్లో కురిసిన భారీ వర్షాలకు కేపీ (కండలేరు-పూండి) కాలువ పలు ప్రాంతాల్లో దెబ్బతింది. దీన్ని రూ.10.20 కోట్ల వ్యయంతో మరమ్మతులు చేయనున్నట్లు నీటి వనరులశాఖ అధికారులు బుధవారం వెల్లడించారు. త్వరలో పనులు ప్రారంభించి వర్షాల లోపు పూర్తి చేసేందుకు ప్రణాళిక రూపొందించినట్లు తెలిపారు.

ఆంధ్రజ్యోతి

# పెట్టుబడుల సమీకరణలో రాష్ట్రం ముందంజ

● డిప్యూటీ సీఎం ఉదయనిధి

చెన్నై, జూలై 30 (ఆంధ్రజ్యోతి): స్వదేశీ, విదేశీ పెట్టుబడుల సమీకరణలో రాష్ట్రం ముందంజలో ఉందని, కొత్త పరిశ్రమల ఏర్పాటుకు సులభతరమైన ఏకగవాక్ష పద్ధతిలో అనుమతులిచ్చే రాష్ట్రం కూడా ఇదేనని ఉప ముఖ్యమంత్రి ఉదయనిధి అన్నారు కోట్టూరు పురంలోని అన్నా సెంటినరీ లైబ్రరీలో బుధవారం ఉదయం రాష్ట్ర సమాచార సాంకేతిక శాఖ ఆధ్వర్యంలో ఏర్పాటైన రాష్ట్ర నూతన మేథో సంపత్తి హక్కుల పరిరక్షణ తొలి సదస్సులో ఆయన ప్రసంగించారు. ఆ సందర్భంగా ఏర్పాటైన ప్రదర్శనలో రాష్ట్రానికి చెందిన 16 మంది పరిశోధకుల పేటెంట్ పొందిన నూతన ఆవిష్కరణలను ఆయన ఆసక్తిగా పరిశీలించారు. ఈ సందర్భంగా ఉదయనిధి మాట్లాడుతూ ద్రావిడ తరహా పాలనను అందించే డీఎంకే ప్రభుత్వం కొత్త అన్వేషణలకు, పరిశోధనలకు అగ్రతాంబూలం ఇస్తుందన్నారు. 'నాన్ ముదల్వన్' పథకం ద్వారా విద్యార్థులు సమాచార సాంకేతిక శాఖలో ప్రతిభాపాటవాలను పెంపొందించుకోగలుగుతున్నారని తెలిపారు. ఈ సదస్సులో మంత్రి పళనివేల్ త్యాగరాజన్, రాష్ట్ర నిధుల సంస్థ ఉపాధ్యక్షుడు జే జయరంజన్ తదితరులు పాల్గొన్నారు.



సదస్సులో యాంత్రిక పరికరాలను పరిశీలిస్తున్న ఉప ముఖ్యమంత్రి

సాక్షి

# ఆవిష్కరణలకు తొలి ప్రాధాన్యత

- డిప్యూటీ సీఎం ఉదయ నిధి వెల్లడి




ఉపముఖ్యమంత్రి ఉదయనిధి స్టాలిన్ సమక్షంలో ఒప్పందాలు

సాక్షి, చెన్నై: తమిళనాడులో ఆవిష్కరణ, మేధో సంపత్తికి తొలి ప్రాధాన్యత అని డిప్యూటీ సీఎం ఉదయ నిధి స్టాలిన్ ప్రకటించారు. టెక్నాలజీ ఎగ్జిబిషన్ హాల్ ప్రదర్శనలో పేటెంట్ పొందిన ట్రాన్స్ సెండెంటల్ టెక్నాలజీ ఆవిష్కరణలను బుధవారం ఆయన నపరిశీలించారు. తమిళనాడు ప్రభుత్వ సమాచార. సాంకేతిక పరిజ్ఞానం , డిజిటల్ మంత్రిత్వ శాఖ సేవల విభాగం పరిధిలోని తమిళనాడు ఇన్స్టిట్యూట్ ఆఫ్ టెక్నాలజీ నేతృత్వంలో అన్నా శత జయంతి స్మారక గ్రంథాలయం వేదికగా మేథో శక్తి కేంద్రం- తమిళనాడు, భారత దేశం అన్న అంశంతో ఆవిష్కరణ ప్రదర్శన ఏర్పాటు చేశారు. దీనిని డిప్యూటీ సీఎం ఉదయనిధి స్టాలిన్ పరిశీలించారు. ఇక్కడి ఆవిష్కరణలను, పేటెంట్లు పొందిన వివిధ పరిశోధనలను విష్కరించారు. తమిళనాడును ఆవిష్కరణలకు రాజధానిగా తీర్చిదిద్దుదామని ఈసందర్భంగా ప్రకటించారు. ఈ సదస్సులో

తమిళనాడు నుంచి 16 మంది పరిశోధకుల పేటెంట్లు, ఆవిష్కరణలకు సత్కారం, నగదు ప్రోత్సాహం అందించారు. 5 స్వదేశీ, అభివృద్ధి చెందుతున్న సాంకేతికలు, టెక్నాలజీ ఇన్నోవేషన్ కంపెనీలకు ఐడీఎస్టీ సెంటర్‌ఫౌండేషన్ ద్వారా రూ. 53 లక్షలను చెక్కులను అందజేశారు. అలాగే ఫెసిలిటేషన్ సెంటర్ నేతృత్వంలో విద్యా పరిశోధకుల ఆవిష్కరణలకు, పేటెంట్ పొందిన కంపెనీలు, విద్యా పరిశోధకుల ఉపయోగం కోసం పారిశ్రామిక సంస్థల మధ్య ఒప్పందాలు జరిగాయి. ఐడీటీఎస్ సెంటర్‌కు మద్దతు ఇచ్చే విధంగా డీప్ లెర్నింగ్ టెక్నాలజీ , అభివృద్ధి చెందుతున్న టెక్నాలజీ స్టార్టప్‌లకు మద్దతుగా అమెరికన్ సొసైటీ ఆఫ్ మెకానికల్ ఇంజనీర్స్ ఇండియా, నేషనల్ రీసెర్చ్ అండ్ డెవలప్‌మెంట్ కార్పొరేషన్, సెంట్రల్ హై-స్పీడ్ కంప్యూటింగ్ డెవలప్‌మెంట్ కార్పొరేషన్, మహీంద్రా - మహీంద్రా, ఇండియన్ ఇన్స్టిట్యూట్ ఆఫ్




నగదు ప్రోత్సాహం అందజేస్తూ..

సైన్స్ అండ్ టెక్నాలజీ వంటి ఆరు సంస్థలో కూడిన కూడిన ఇంజినీరింగ్ సౌకర్యాల మ్యాప్( ఐ అండ్‌ఏ స్‌టీఈఎం)ముందుకు వచ్చాయి. తమిళనాడు అంతటా ఉన్న ఇంజినీరింగ్ కళాశాలలు, వ్యాపార ఇంక్యుబేటర్లు, స్టార్టప్ కంపెనీలు, పారిశ్రామిక కంపెనీలు, పెట్టుబడిదారులు, ప్రభుత్వ రంగానికి సంబంధించిన సాంకేతిక పరిశోధకులు, పేటెంట్ హోల్డర్లు ఈ సమావేశానికి తరలి వచ్చారు. ఈ కార్యక్రమంలో సమాచార సాంకేతిక , డిజిటల్ శాఖ మంత్రి డాక్టర్ పళని వేల్ త్యాగరాజన్, రాష్ట్ర ప్రణాళికా కమిటీ ఎగ్జిక్యూటివ్ వైస్ చైర్మన్ డాక్టర్ జె. జయరంజన్, టెక్నాలజీ, డిజిటల్ సేవల విభాగం ప్రభుత్వ ప్రాథమిక కార్యదర్శి ప్రజేంద్ర నవ్‌నీత్, ఐడిఎస్‌టి సెంటర్ చైర్మన్ వనితా వేణుగోపాల్, తదితరులు పాల్గొన్నారు. ఈ సందర్భంగా ఉదయ నిధి మాట్లాడుతూ, తమిళనాడు పరిశ్రమలకు రాజధానిగా మారుతున్నట్లు వివరించారు. పెట్టుబడులు విస్తృతంగా రానున్నాయని వివరించారు. ఉద్యోగ అవకాశాల కల్పన విస్తృతం చేశామన్నారు. ఆవిష్కరణలు, పరిశోధనలకు తమిళనాడులో తొలి ప్రాధాన్యత ఉంటుందని ప్రకటించారు.

# ഗവേഷകർ സ്റ്റാർട്ടപ്പുകൾ കെട്ടിപ്പടുക്കുന്നതിൽ ശ്രദ്ധചെലുത്തണം -ഉദയനിധി സ്റ്റാലിൻ



▶ ചെന്നൈയിൽ ബുധനാഴ്ച നടന്ന ഐപി കോൺക്ലേവ് ഉദ്ഘാടനം ചെയ്തശേഷം സ്റ്റാളുകൾ നോക്കിക്കാണുന്ന ഉപമുഖ്യമന്ത്രി ഉദയനിധി സ്റ്റാലിൻ

**ചെന്നൈ ▸** ഗവേഷകർ പ്രബന്ധങ്ങളിലുപരി, സ്റ്റാർട്ടപ്പുകൾ കെട്ടിപ്പടുക്കുന്നതിൽ ശ്രദ്ധ ചെലുത്തണമെന്ന് ഉപമുഖ്യമന്ത്രി ഉദയനിധി സ്റ്റാലിൻ പറഞ്ഞു. വ്യാവസായിക നിക്ഷേപങ്ങളുടെ കാര്യത്തിൽ തമിഴ്നാട് രാജ്യത്ത് മുൻപന്തിയിലാണെന്നും സ്റ്റാർട്ടപ്പുകൾക്ക് വളർന്നു പന്തലിക്കാനുള്ള എല്ലാ അവസരങ്ങളും സർക്കാർ ഒരുക്കുന്നുണ്ടെന്നും ഇവിടേക്ക് വാതിൽ തുറന്നിട്ടിരിക്കുകയാണെന്നും അദ്ദേഹം വ്യക്തമാക്കി. ബുധനാഴ്ച ചെന്നൈയിൽ നടന്ന പ്രഥമ ഐപി കോൺക്ലേവ് ഉദ്ഘാടനം ചെയ്യുകയായിരുന്നു ഉദയനിധി. സംസ്ഥാന ഇൻഫർമേഷൻ ടെക്നോളജിക്കു കീഴിലുള്ള തമിഴ്നാട് ടെക്നോളജി (ഐടിഎൻടി) ഹബ്ബാണ് കോൺക്ലേവ് സംഘടിപ്പിച്ചത്. ഗവേഷകർ, സ്റ്റാർട്ടപ്പുകൾ, വ്യവസായങ്ങൾ, നയരൂപകർത്താക്കൾ എന്നിവരിൽ ബൗദ്ധിക സ്വത്തവകാശത്തെക്കുറിച്ചുള്ള അവബോധം വർധിപ്പിക്കാൻ കോൺക്ലേവ് സഹായിക്കുമെന്നും അദ്ദേഹം അഭിപ്രായപ്പെട്ടു. വാണിജ്യമേഖലകളിലേക്കും പുതിയ കമ്പനികളിലേക്കും ഗവേഷണം പ്രയോജനപ്പെടുത്തുന്നതിനുള്ള വഴികൾ കണ്ടെത്തുന്നതിനാണ് കോൺക്ലേവ് സംഘടിപ്പിക്കുന്നതെന്ന് വിവര സാങ്കേതികമന്ത്രി പളനിവേൽ ത്യാഗരാജൻ പറഞ്ഞു. നാഷണൽ റിസർച്ച് ഡിവലപ്മെന്റ് കോർപ്പറേഷൻ, സെന്റർ ഫോർ ഡെവലപ്മെന്റ് ഓഫ് അഡ്വാൻസ്ഡ് കംപ്യൂട്ടിങ്, ബോഷ് ഇന്ത്യ, അമേരിക്കൻ സൊസൈറ്റി ഓഫ് മെക്കാനിക്കൽ എൻജിനിയേഴ്സ് ഇന്ത്യ, ഇന്ത്യൻ സയൻസ് ടെക്നോളജി ആൻഡ് എൻജിനിയറിങ് ഫെസിലിറ്റീസ് മാപ്പ് , മഹീന്ദ്ര ആൻഡ് മഹീന്ദ്ര എന്നിവയുമായി ധാരണാപത്രങ്ങളും ചടങ്ങിൽ കൈമാറി.

राजस्थान पत्रिका

# उद्योग-अकादमिक सहयोग को बढ़ावा देगा आइएन2टीएन आईपी कॉन्क्लेव

## उपमुख्यमंत्री उदयनिधि स्टालिन ने किया उद्घाटन



उद्घाटन के बाद अवलोकन करते उपमुख्यमंत्री उदयनिधि स्टालिन।

**चेन्नई @ पत्रिका.** उपमुख्यमंत्री उदयनिधि स्टालिन ने बुधवार को चेन्नई में प्रथम वार्षिक इनोवेट इन तमिलनाडु (आइएन2टीएन) आईपी कॉन्क्लेव का उद्घाटन किया। "बौद्धिक महाशक्ति: तमिलनाडु को भारत की नवाचार राजधानी में बदलना" विषय पर आधारित इस कॉन्क्लेव का आयोजन तमिलनाडु सरकार के सूचना प्रौद्योगिकी एवं डिजिटल सेवा विभाग के अंतर्गत कार्यरत तमिलनाडु प्रौद्योगिकी (आइटीएनटी) हब द्वारा किया गया था। उपमुख्यमंत्री ने आइटीएनटी हब में पाथफाइंडर कार्यक्रम के अंतर्गत इनक्यूबेट किए गए 5 डीप एंड इमर्जिंग टेक स्टार्टअप्स को आइटीएनटी हब के फाउंडेशन फंड के अंतर्गत सीड फंड के चेक सौंपे।उपमुख्यमंत्री की उपस्थिति में आइटीएनटी हब स्थित तमिलनाडु प्रौद्योगिकी हस्तांतरण सुविधा केंद्र ने अकादमिक शोधकर्ताओं और उद्योगों के बीच चार प्रौद्योगिकी हस्तांतरणों की सुविधा प्रदान की। आइटीएनटी हब ने सात समझौता ज्ञापनों का भी आदान-प्रदान किया जिनमें अमेरिकन सोसाइटी ऑफ मैकेनिकल इंजीनियर्स इंडिया, राष्ट्रीय अनुसंधान विकास निगम, सेंटर फॉर डेवलपमेंट ऑफ एडवांस्ड कंप्यूटिंग, बेंगलूरु, बॉश इंडिया, महिंद्रा एंड महिंद्रा और भारतीय विज्ञान प्रौद्योगिकी एवं इंजीनियरिंग सुविधाओं का मानचित्र और टीएनटीटीएफसी के लिए कानूनी साझेदारों के साथ आशय पत्र शामिल रहे।

इस कॉन्क्लेव का उद्देश्य उद्योग-अकादमिक सहयोग को बढ़ावा देना था जिसमें तमिलनाडु भर के इंजीनियरिंग कॉलेजों, इनक्यूबेशन केंद्रों, स्टार्टअप्स, उद्योगों, निवेशकों और सरकारी विभागों के प्रमुखों के लगभग 1,500 गहन और उभरते तकनीकी शोधकर्ताओं और पेटेंट धारकों ने भाग लिया। कॉन्क्लेव की एक प्रमुख विशेषता इंटेलेक्चुअल प्रॉपर्टी इंडिया के सहयोग से एक दिवसीय मास्टरक्लास रहा जिसमें 270 शोधकर्ताओं, छात्रों और स्टार्टअप संस्थापकों ने भाग लिया।

மாலை மலர்

# தொழில் முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்குகிறது

## துணை முதல்-அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு

சென்னை, ஜூலை.30—

சென்னை கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் தமிழ்நாட்டின் புத்தமை அறிவுசார் சொத்துரிமை முதலாவது மாநாடு நடைபெற்றது.

இதையொட்டி அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியில், தமிழ்நாட்டைச் சேர்ந்த 16 ஆராய்ச்சியாளர்களின் காப்புரிமை பெற்ற கண்டுபிடிப்புகள் அடங்கிய அரங்குகளை துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பார்வையிட்டு, ஆராய்ச்சியாளர்களுடன் கலந்து ரையாடினார்.

நிகழ்ச்சியில் துணை முதல்—அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது:—

தகவல் தொழில்நுட்ப துறை சார்பில் தமிழ்நாட்டில் முதன்முறையாக அறிவுசார் சொத்துரிமை மாநாடு நடைபெறுகிறது. திராவிட மாடல் அரசு புதிய தொழில் நுட்பங்களை எப்போதும் வரவேற்கிறது. திராவிட மாடல் ஆட்சியில் தகவல்



தொழில்நுட்பத் துறை சிறந்து விளங்குகிறது. தொழில் முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்குகிறது. தமிழ நாட்டில் அதிகளவில் தொழில் முதலீடுகள் குவிந்து வருகிறது: கலைஞர் ஆட்சியில் தான் தகவல் தொழில் நுட்ப பூங்காக்கள் உருவாக்கப்பட்டன.

இன்று அது வளர்ச்சி அடைந்துள்ளது. மென் பொருள் ஏற்றுமதியில் இந்திய அளவில் 3—வது மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. 'நான் முதல்வன்', திட்டம் மூலம் தமிழக மாணவர்கள் தகவல் தொழில்நுட்பத் துறை யில் சாதித்து வருகின்றனர்.

இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில் அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், மாநிலத் திட்டக்குழுவின் செயல் துணைத் தலைவர் ஜெ. ஜெயரஞ்சன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அரசு முதன்மைச் செயலாளர் பிரஜேந்திர நவ்னித், ஐடிஎன்டி மையத்தின் தலைமைச் செயல் அலுவலர் வனிதா வேணுகோபால், தேசிய ஆராய்ச்சி ம்ற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் (ஓய்வு) கமாண்டர் அமித்ரஸ்தோகி, ஜெட் வெர்க்கின் எலக்ட்ரானிக்ஸ் தலைவர் ஜோஷ் போல்கர், மற்றும் ஆராய்ச்சியாளர்கள், கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

மாலை முரசு



சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற அறிவுசார் சொத்துரிமை முதலாவது மாநாட்டை முன்னிட்டு அமைக்கப்பட்டிருந்த தொழில்நுட்ப கண்காட்சியை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பார்வையிட்டார்.

தமிழ் முரசு
TAMIL MURASU
VOICE OF THE COMMUNITY




துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற தமிழ்நாட்டின் புத்தமை அறிவுசார் சொத்துரிமை முதலாவது மாநாட்டினையொட்டி அமைக் கப்பட்டிருந்த தொழில்நுட்ப கண்காட்சியில், காட்சிப்படுத்தப்பட்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த 16 ஆராய்ச்சியாளர்களின் காப்புரிமை பெற்ற ஆழ்நிலை கண்டுபிடிப்புகள் அடங்கிய அரங்குகளை பார்வையிட்டு, ஆராய்ச்சியாளர்களுடன் கலந்துரையாடினார். இந்நிகழ்வில், அமைச்சர் பழனி வேல் தியாகராஜன், ஆராய்ச்சியாளர்கள், கல்லூரி மாணவ, மாணவியர்கள் உடனிருந்தனர்.